Workers of Kallakurichi Co-operative Sugar Mills

* 122 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether a number of workers of the Kallakurichi Co-operative Sugar Mills were suspended about January–February–March, 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:

(அ) ஆம்.

(இ) அவர்கள் நெடுநாள் வேலைக்கு வராததாலும் தீய நடத்தைக்காகவும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர், வேலை நீக்கம் செய்யப்பட்ட 10 தொழிலாளர்களில் நால்வர் மீண்டும் நியமனம் செய்யப்பட்டனர். விசாரணைக்குப் பிறகு அறுவர் வேலையிலிருந்து விலக்கப்பட்டனர்.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, அவர்கள் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதைஅமைச்சரவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: வேலையிலிருந்து நீக்கப் பட்டதுதான் எடுக்கப்பட்ட நடவடிக்கை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், அவர்கள் விசாரணையின் பொழுது, தாங்கள் நிறுத்தப்பட்டதாகவும், அவர்கள் தாங்களே வேலையிலிருந்து வேலைக்கு வராமல் இருந்தது உண்மை அல்ல என்றும் தெரிவிக்கிறார்களே, அப்படியானால் அந்த ஆறுபேர்களைப் பற்றிப் புனராலோசனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அந்த 6 பேரும் இது வரையில் எவ்வித அப்பீலும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Workers of Khadi Board under suspension

* 123 *Q.*—Thiru K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether some of the workers of Khadi Board are still under suspension for the strike on 2nd October 1968; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:

(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கிடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், 1968-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ஆம் தேதி அடையாள வேலைநிறுத்தம் செய்ததால் 70 பேர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதுமல்லாமல்